10553/20

**இணை ஆணையர் (நிர்வாகம்), முதன்மை செயலர்/ வணிகவரி ஆணையர், வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: க. கற்பகம், இ.ஆ.ப.**

**செயல்முறை ஆணை எண். ஒய்-3/15305/2020-1** நாள் 30.06.2021.

-6 JUL 2021 6022

பொருள்: பொதுப்பணி - வணிகவரித் துறை - திருச்சிக் கோட்டம் - மறைந்த அரசு ஊழியர் திரு. ப. மதியழகன் என்பவரின் மகன் திரு ம. பக்ரிநாத், இளநிலை உதவியாளர் - கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணி வரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:
1. இணை ஆணையர் (மா.வ.), திருச்சி, ந.எண்.4952/2018/ஆ2, நாள் 11.06.2020.
2. கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)(மு.கூ.பொ.) அவர்களின் கடித எண். ஒய்-3/15305/2020, நாள் 04.09.2020.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.02.2021
4. அரசு கடித எண்.2403/அ2/2020-1, நாள் 24.03.2021.

*******

__ஆணை:__

திருச்சி கோட்டத்திற்குட்பட்ட வணிகவரி அலுவலர் அலுவலகம், பட்டுக்கோட்டை-2-ல் துணை வணிகவரி அலுவலராகப் பணிபுரியும் போது 09.10.2016 அன்று மறைந்த அரசு ஊழியர் திரு.ப. மதியழகன் என்பவரின் மகன் திரு. ம. பக்ரிநாத் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, 24.12.2018 அன்று பிற்பகல் முதல் பட்டுக்கோட்டை-1, வரிவிதிப்பு சரகம், மாநிலவரி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 24.12.2018 அன்று பிற்பகல் முதல் பணி வரன்முறை செய்யும் பொருட்டு, தனியரது கீழ்காணும் அனைத்து அசல் சான்றுகள்/ஆவணங்கள் ஆகியவை சரிபார்ப்பு பட்டியலுடன் ஒப்பு நோக்கி சரிபார்க்கப்பட்டது.

| | |
|---|---|
| 1. | இறந்த அரசு ஊழியரின் மனைவி வாரிசுதாரருக்குப் பணி நியமனம் கோரி விண்ணப்பித்த கடிதம் |
| 2. | விண்ணப்பதாரரின் கடிதம் |
| 3. | 18 கலன் கொண்ட முறைப்படுத்தப்பட்ட படிவம். |
| 4. | நியமன ஆணையின் நகல் |
| 5. | இறப்புச் சான்றிதழ் |
| 6. | வாரிசுச் சான்றிதழ் |
| 7. | குடும்பத்தில் உள்ள பிற வாரிசுதாரர்களின் மறுப்பின்மைச் சான்றிதழ் |
| 8. | ஒருங்கிணைந்த சான்றிதழ்<br>1. இறந்த அரசு ஊழியரின் மனைவி மறுமணம் செய்யவில்லை என்பதற்கான சான்றிதழ்<br>2. மற்ற வாரிசுதாரகள் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றிதழ்<br>3. அசையும் மற்றும் அசையாச் சொத்து சான்றிதழ்<br>4. வறிய நிலைச் சான்றிதழ் |
| 9. | தனியரின் கல்வித் தகுதிச் சான்றிதழ் |
| 10. | கல்விச் சான்றிதழின் மெய்த்தன்மை சான்றிதழ் |
| 11. | விண்ணப்பதாரரின் உறுதி மொழி |
| 12. | தனியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்கம் மற்றும் பணிநியமனம் குறித்த பணிப்பதிவேட்டின் பக்க நகல்கள் உரிய அலுவலரால் மேலொப்பம் இடப்பட்டது. |
| 13. | இறந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்கம் பிறந்த நாள் குறிப்பிடப்பட்ட நகல் உரிய அலுவலரால் மேலொப்பம் இடப்பட்டது. |
| 14. | இறந்த அரசு ஊழியரின் பணி வரன்முறை செய்யப்பட்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல் உரிய அலுவலரால் மேலொப்பம் இடப்பட்டது. |
| 15. | இதர சான்றுகள். |

2. எனவே, திரு. ம. பக்ரிநாத், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.02.2021–ன்படி அவர் பணியில் சேர்ந்த நாளான 24.12.2018 அன்று பிற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

3. பணி வரன்முறை தொடர்பான செயல்முறை ஆணையை தனியருக்கு சார்வு செய்து அதன் நகலினையும், மேற்காணும் அசல் சான்றுகள்/ஆவணங்களை பெற்றமைக்கான ஒப்புதலையும் இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– க. கற்பகம்,
இணை ஆணையர் (நிர்வாகம்)

**பெறுநர்:**

திரு. ம. பக்ரிநாத், இளநிலை உதவியாளர்,
பட்டுக்கோட்டை–1 வரிவிதிப்பு வட்டம்,
மாநிலவரி அலுவலர் அலுவலகம்,
திருச்சிக் கோட்டம்.
(இணை ஆணையர் (மா.வ), திருச்சிக் கோட்டம் மூலமாக)

**நகல்:**

இணை ஆணையர் (மா.வ), திருச்சிக் கோட்டம்,
சம்பந்தப்பட்ட கணக்கு அலுவலர்,
(இணை ஆணையர் (மா.வ), திருச்சிக் கோட்டம் மூலமாக)
இருப்புக்கோப்பு ஒய்–3.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்
1.7.20
01.07.2021